**ARTICLE 12 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00043**
Vol. 20, No. 01 (October 2026) – Part I | pp. 63–66
Received: 1 October 2026 • Accepted: 1 October 2026

# கு.அழகிரிசாமியின் சிரிக்கவில்லை-மௌனப் பார்வை

**முனைவர்.விஜயலெட்சுமி ஆ**[1,*]
[1]உதவிப்பேராசிரியர்&துறைத்தலைவர்,தமிழ்த்துறை,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஒட்டப்பிடாரம்., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.விஜயலெட்சுமி ஆ — vijayalakshminov74@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

‘சிரிக்கவில்லை’ சிறுகதை மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் வெளிப்படும் உளவியல் உணர்வுகள், சமூகச் சூழல், உறவுகளின் தன்மை, மனப்போராட்டங்கள் ஆகியவற்றை மையப்படுத்தி ஆராயத்தக்கதாக அமைகிறது. இக்கதையில் இடம்பெறும் கதாபாத்திரங்களின் செயல்பாடுகள் மற்றும் உரையாடல்,உரையாடலின்மைகளின் வழியாக அவர்களின் வெளிப்படையான நடத்தைக்கும் உள்ளார்ந்த மனநிலைக்கும் இடையிலான வேறுபாடு வெளிப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, சிரிப்பு என்பது மகிழ்ச்சியின் வெளிப்பாடு மட்டுமல்ல; சில நேரங்களில் மனவேதனை, ஏமாற்றம், இயலாமை, சமூக அழுத்தம் ஆகியவற்றை மறைக்கும் வெளிப்புறத் தோற்றமாகவும் அமைகிறது . ‘சிரிக்கவில்லை’ சிறுகதையின் கதை அமைப்பு, கதாபாத்திரப் படைப்பு, உளவியல் கூறுகள், சமூகப் பார்வை, உரையாடல் உத்தி மற்றும் தலைப்புப் பொருத்தம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. கதாபாத்திரங்களின் மனவுணர்வுகள் எவ்வாறு நிகழ்வுகளின் வழியாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பதும் ஆராயப்படுகிறது. இச்சிறுகதை தனிமனித உளவியலையும் சமூக உறவுகளையும் இணைத்துப் பதிவு செய்யும் படைப்பாக இவ்வாய்வில் அணுகப்படுகிறது.

**Keywords / திறவுச் சொற்கள்:** உணர்வு வெளிப்பாடு; சிரிப்பின்மை; மௌனப் பார்வை; உளவியல்; உடல்மொழி

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ஆ, மு. (2026). கு.அழகிரிசாமியின் சிரிக்கவில்லை-மௌனப் பார்வை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

இலக்கியவகைகளில் சிறுகதை என்பது வெறும் பொழுதுபோக்குக்குச் சாதனமாக இல்லாமல்,படித்து முடிப்பவரின் சிந்தையில் ஒரு சிறந்த கருத்தை,சிறந்த உண்மையைக் கையிருப்பாக விட்டுச்செல்லவேண்டும் என்றக் கோட்பாட்டை அழகாகத் தம் கதைகளில் பதிவு செய்கிறார் கு.அழகிரிசாமி.அவர்தம் படைப்புகளில் ‘சிரிக்கவில்லை’ என்னும் படைப்பு, பற்றி இக்கட்டுரை ஆராய்கிறது.

## தலைப்பின் பொருத்தம்

‘சிரிக்கவில்லை’ என்பது படைப்பின் முக்கியமான குறியீட்டுத் தலைப்பாக அமைகிறது. சிரிப்பு என்பது மகிழ்ச்சி, நெருக்கம், அன்பு, ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றை வெளிப்படுத்தும் இயல்பான உணர்வாகும். எனவே, ‘சிரிக்கவில்லை’ என்பது ஒரு செயலின் எதிர்வு

மட்டுமல்ல; கதாபாத்திரத்தின் உள்ளத்தில் நிகழும் உணர்ச்சிப் போராட்டத்தின் வெளிப்பாடாகவும் அமைகிறது.

## மனித உறவுகளின் சித்திரிப்பு

கதையில் ராஜாராமன், பாப்பம்மாள் உள்ளிட்ட பாத்திரங்களின் எளியச் செயல்பாடுகள் வழியாக மனித உறவுகள் சித்திரிக்கப்படுகின்றன. ஒருவர் மற்றொருவரிடம் கொண்டுள்ள அக்கறை நேரடியாகச் சொல்லப்படாமல், பார்வை, பேச்சு, வருகை, உடல் மொழி போன்றவற்றின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது.

“சும்மாவந்தேன் என்றாள் பாப்பம்மாள்
எப்பக் கேட்டாலும் ‘சும்மாதானா’!

ராஜராம்சிரித்தான். பாப்பம்மாள் சிரிக்கவில்லை.அவசியம் இல்லாமலே நான் வீட்டுக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டுபோய்விட்டாள்”(பக்11சிரிக்கவில்லை ,தமிழ்ப்புத்தகாலயம்)

இதனால் ஆசிரியர், “சொல்லப்படாத உணர்வுகளுக்கும் இலக்கியத்தில் இடம் உண்டு” என்பதை உணர்த்துகிறார். ஒரு சிறிய நிகழ்வைக் கூட மனநிலைகளின் மாற்றத்தோடு இணைத்துக் காட்டுவது படைப்பின் சிறப்பாகும்.

## உளவியல் அணுகுமுறை

பிராய்டின் உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டின்படி, மனிதனின் வெளிப்படையான செயல்களுக்குப் பின்னால் நனவிலி மனத்தில் புதைந்திருக்கும் ஆசைகள், எண்ணங்கள், உணர்வுகள் செயல்படுகின்றன. நனவிலி உள்ளடக்கங்கள் நேரடியாக வெளிப்படாமல் வேறு வடிவங்களில் வெளிப்படலாம்.( “That source is the unconscious.”— Sigmund Freud, The Interpretation of Dreams)

‘சிரிக்கவில்லை’ கதையில் பாப்பம்மாள் ராஜாராமனின் வீட்டிற்கு அடிக்கடி வந்து, அவனுடைய தாயாருக்கு வீட்டு வேலைகளில் உதவுவது போன்ற செயல்கள் வழியாக அவளுடைய அன்பும் ஈடுபாடும் மறைமுகமாக வெளிப்படுகின்றன. இத்தகைய பாத்திரச் சித்திரிப்பே கதையின் உளவியல் தன்மைக்கு அடிப்படையாக அமைகிறது.(“The dream would not occur if the preconscious wish were not reinforced from another source: Sigmund Freud, The Interpretation of Dreams)

பாப்பம்மாள் முதலில் சிரித்த நிகழ்வுக்கும் பின்னர் சிரிக்காமல் இருந்த நிகழ்வுக்கும் இடையிலான வேறுபாடு, அவளுடைய மனவளர்ச்சியையும் உணர்வு மாற்றத்தையும் வெளிப்படுத்துவதாக இலக்கியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (கார்ல் யுங் – நனவிலி மனமும் குறியீடும்)யுங், மனித மனத்தில் நனவிலி நிலை முக்கியப் பங்கு வகிப்பதாகக் கருதுகிறார். குறிப்பாக குறியீடுகள் (symbols) மூலம் நனவிலி மனத்தின் உள்ளடக்கங்களைப் புரிந்துகொள்ள முடியும்.( Man and His Symbols) நூல் நனவிலி மனம், கனவு, குறியீடு ஆகியவற்றின் தொடர்பை விளக்குகிறது)

‘சிரிக்கவில்லை’ படைப்பின் முக்கியமான இலக்கியச் சிறப்பு அதன் உளவியல் நோக்கு ஆகும். கதாபாத்திரங்கள் என்ன செய்கிறார்கள் என்பதை மட்டும் ஆசிரியர் பதிவு செய்யவில்லை; அவர்கள் எவ்வாறு

உணர்கிறார்கள் என்பதையும் வாசகன் உணரக்கூடிய வகையில் நிகழ்வுகளை அமைக்கிறார்.

படைப்பில் காணப்படும் வீட்டு வாழ்க்கை, பொருளாதாரச் சூழல், அன்றாட வேலைகள், வெயில், உணவு மற்றும் குடும்பச் செயல்பாடுகள் போன்ற விவரங்கள் சமூக வாழ்க்கையை இயல்பாகப் பிரதிபலிக்கின்றன.

## பாத்திரப் படைப்பு

பார்ப்பம்மாள் பாத்திரமும் வெறும் துணைப் பாத்திரமாக இல்லாமல், கதையின் உணர்வியல் இயக்கத்திற்கு முக்கியத்துவம் பெறுகிறது. அவளது வருகை, பேச்சு, செயல்பாடுகள் மற்றும் குறிப்பாக சிரிப்பின் இல்லாமை ஆகியவை கதையின் மைய உணர்வை வலுப்படுத்துகின்றன.

## இயற்கைச் சூழலின் பங்கு

படைப்பில் வெயில், வாசல், வீடு, சுற்றுப்புறச் சூழல் போன்றவை வெறும் பின்னணிக் கூறுகளாக மட்டும் அமையவில்லை. கதாபாத்திரங்களின் மனநிலையோடு அவை இணைக்கப்படுகின்றன.

குறிப்பாக வெயிலின் கடுமை, காட்சியின் உணர்வுத் தீவிரத்தையும் மனநிலையின் அழுத்தத்தையும் அதிகரிக்கிறது. இயற்கைக் காட்சியை மனித உணர்வுடன் இணைப்பது படைப்பின் கலைத்தன்மையை உயர்த்துகிறது.

## உரையாடல்களின் சிறப்பு

படைப்பில் இடம்பெறும் உரையாடல்கள் கதையை முன்னெடுத்துச் செல்வதோடு மட்டுமல்லாமல், பாத்திரங்களின் மனநிலையையும் வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக நேரடியாகச் சொல்ல முடியாத உணர்வுகள் உரையாடல்களின் இடைவெளிகளிலும் எதிர்வினைகளிலும் வெளிப்படுகின்றன.

## குறியீட்டியல் நோக்கு

இப்படைப்பில் ‘சிரிப்பு’ ஒரு முக்கியக் குறியீடாகக் கொள்ளத்தக்கது. சிரிப்பு இல்லாமை என்பது ஒரு சாதாரண உடல் வெளிப்பாடு அல்ல. அது உறவுக்குள் உருவாகும் இடைவெளியையும், மன த்தடையையும், எதிர்பார்ப்பையும் குறிக்கிறது.

## முடிவுரை

, ‘சிரிக்கவில்லை’ என்னும் படைப்பு வெளிப்படையாக ஒரு சிறிய வாழ்க்கை நிகழ்வைச் சொன்னாலும், அதன் உள்ளடக்கத்தில் மனித உறவுகளின் நுட்பம், சொல்லப்படாத உணர்வுகள், உளவியல் போராட்டம், சமூக யதார்த்தம் ஆகிய பல்வேறு கூறுகள் பொதிந்துள்ளன. ‘சிரிப்பு’ என்ற ஒரு சிறிய மனித உண்ர்வுவெளிப்பாட்டை மையமாக வைத்து, ‘சிரிக்காமை’க்குள் மறைந்திருக்கும் உணர்வுகளை வாசகனுக்குப் புலப்படுத்துவதே படைப்பின் முக்கியக் கலைச்சாதனை. (ப. 10.அழகிரிசாமி, சிரிக்கவில்லை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதற்பதிப்பு, 1952)

## துணைநூற் பட்டியல் (References)

1. அழகிரிசாமி, கு. சிரிக்கவில்லை : கதைகள். சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், முதற்பதிப்பு, 1952.

Vol. 20, No. 01 (October 2026) – Part I • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

2. தா. ஏ. ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், ஜெய்தினைப் பதிப்பகம், சென்னை, 2012.
3. தி. ச. நடராசன், திறனாய்வுக்கலை, NCBH, சென்னை, 2012. க. பஞ்சாங்கம், தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு, அகம், தஞ்சாவூர், 2004.
4. க. கைலாசபதி, திறனாய்வுப் பிரச்சனைகள், சென்னை புத்தக ஹவுஸ், சென்னை, 1980
5. குவிகம் மின்னிதழ்
6. ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம். சிரிக்கவில்லை : கதைகள் / கு. அழகிரிசாமி.
7. Sigmund Freud, The Interpretation of Dreams � Psych Web

© 2026 முனைவர்.விஜயலெட்சுமி ஆ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..